DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure).

**IN THE COURT OF** ***Special Court for trial of cases under the Prevention of Corruption Act, Salem.***

Calendar

Miscellaneous

Preliminary register

Sessions Special CC . 1 / 2017

Deposition of witness for ---- Prosecution : P.W. 5

Name : திரு. தமிழரசு

Father's Name : திருமலை கவுண்டர்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act by Tmt. Kalpana, Assistant of this court on the day of 9.7.2019.

**முதல் விசாரணை**

நான் ஏற்கனவே சேலம் பொதுபணி துறையில் கண்காணிப்பு பொறியாளராக பணி செய்து, 31.3.2016 ம் தேதி பணி ஓய்வு பெற்று, சேலத்தில் குடியிருக்கிறேன். ஏற்கனவே நான், 24.8.2011 ம் தேதி முதல் செயற்பொறியாளராக கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்டத்தில் பணி செய்த சமயத்தில், மேற்கு சரக காவல் கணிப்பாளர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை கடிதம் எண்.DE 211/2010/HD/SL dt: 15.5.2012-ல் தலைமை பொறியாளர் (கட்டிடம்)

பொதுப்பணிதுறை சென்னை அவர்களுக்கு மேற்படி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில், தலைமை பொறியாளர் (கட்டிடம்) பொதுப்பணிதுறை சென்னை அவர்கள், விஜயா, க.பெ. பன்னீர்செல்வம் என்பவருக்கு சொந்தமான க.எண்.52/6, பங்களா தெரு, திருவாக்கவுண்டனூர், சேலம் என்ற கட்டிடத்தை பார்வையிட்டு மதிப்பீடு அறிக்கையை தயார் செய்து, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பி வைக்கும்படி எனக்கு உத்தரவிடப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் 2.7.2012 ம் தேதி காலை 11.00 மணி முதல் மதியம் 1.30 மணி வரை சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் மற்றும் திருமதி.விஜயா அவரது கணவர் திரு.பன்னீர்செல்வம் ஆகியோர் முன்னிலையில், என்னால் மதிப்பீட்டு ஆய்வு செய்தேன். அப்போது என்னுடன், உதவி செயற்பொறியாளர் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு சேலம், திரு.R.ராமசாமி அவர்களும் மற்றும் உதவி பொறியாளர் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு சேலம், திரு.நாகராஜன் அவர்களும் உடன் இருந்தார்கள். சேலம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் கொடுத்த கட்டிட அனுமதி உத்தரவு மற்றும் மின் இணைப்பு கொடுக்கப்பட்ட தேதிக்கான விவரங்களையும் என்னிடம் கொடுத்தார்கள். மேலும், வீட்டின் உரிமையாளர்களான திருமதி.விஜயா மற்றும் பன்னீர்செல்வம் ஆகியோரிடம் விவரங்களை கேட்டறிந்து மேற்படி வீடானது, 2003, 2004 ம் வருடத்தில் கட்டப்பட்டது என்று தெரிய வந்தது. அதன் அடிப்படையில் 2003-2004 ம் வருடம் செந்துார விலை விகிதப்படி மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மதிப்பீட்டு தொகை ரூ.13,80,707/- என கணக்கிடப்பட்டது. மேற்சொன்ன மதிப்பீட்டில், நானும் மற்றும் உதவி செயற் பொறியாளர் R.ராமசாமி மற்றும் உதவி பொறியாளர் M.நாகராஜன் ஆகியோர் கையொப்பம் இட்டோம். மேற்சொன்ன கட்டிடம் தரைத்தளம் மற்றும் முதல் தளம் கொண்ட RC கட்டிடம் ஆகும். மேலும் 2 வது மாடியில் AC sheet போட்ட அறை ஒன்றும், RC sheet போட்ட அறை ஒன்றும் இருந்தது. மேற்சொன்ன கட்டிடத்திற்கு அடித்தளம் செங்கல் மற்றும் கருங்கல்லால் கட்டப்பட்டுள்ளது. பேஸ்மட் வரையில் கருங்கல்லாலும், அதற்கு மேல் சுவர் பகுதி செங்கல்லாலும் கட்டப்பட்டுள்ளது. மேற்படி வீட்டிற்கு மேல்கூரை RCC தளம் போடப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடத்தின் carpet area 325.46 ச.மீ அந்த வீட்டின் வசதிகள் சமையல் அறை, படுக்கை அறை, மற்றும் living room -ல் wooden cup board வசதிகள் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வீட்டின் தரைதளம்,

முதல் தளத்தில் மார்புள் போடப்பட்டுள்ளது. மின்சார இணைப்புகள் பொருத்தப்பட்டுள்ளது. தண்ணீர் குழாய் இணைப்பு எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி வீட்டை சுற்றிலும் காம்பவுண்ட சுவர் எழுப்பட்டிருந்தது. பிரதான கட்டிடத்தின் அளவுகள் 17.12 மீ X 8.54 m, portico பகுதி 9.52 m X 3.05 m. staircase பகுதி 3.28m X 1.52m காம்பவுண்ட் வாலுக்கும், போர்டிகோவுக்கும் உள்ள பகுதியில் மொசைக் டைல்ஸ் ஒட்டப்பட்டிருந்தது. மேலும் முதல் மாடியின் பேசேஜ் பகுதியிலும் மொசைக் டைல்ஸ் ஒட்டப்பட்டிருந்தது. செந்துார விலைப்பட்டியல் என்றால், தலைமை பொறியாளர் (பொது) சென்னை அவர்களால் தயாரிக்கப்படும் அனைத்து வயையான கட்டுமானப்பொருள்களின் விலைகள், கூலி தொழிலாளியின் சம்பளம் மற்றும் போக்குவரத்து செலவுகள் மற்றும் ஒரு கட்டிடம் கட்டுவதற்கு தேவையான அனைத்துவிதமான செலவுகள் குறித்து செய்யப்படும் estimation report -ன் படிதான் நாங்கள் மதிப்பீடு தயாரிக்கப்படும். அந்த மதிப்பீட்டு அறிக்கை **அசா.ஆ.** 19 ஆகும். மேற்படி மதிப்பீட்டு அறிக்கையை இயக்குநர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை சென்னை அவர்களுக்கு, எங்கள் அலுவலக கடித எண்.CII/confidential /Supdt./2012-ன் படி, 26.7.2012 ம் தேதி அன்று என்னால் அனுப்பி வைக்கப்பட்டது. மேற்கண்ட ஆய்வறிக்கையின் போது, சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களால், நடவடிக்கை தயாரிக்கப்பட்டு, அதில் நான், உதவி செயற்பொறியாளர் ராமசாமி, உதவி பொறியாளர் நாகராஜன் மற்றும் சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களும் மற்றும் வீட்டின் உரிமையாளர் விஜயா அவர்களின் கணவர் பன்னீர்செல்வம் ஆகியோரும் கையொப்பம் இட்டோம். மேற்படி நடவடிக்கை **அசா.ஆ.**20 ஆகும். மேற்படி வீட்டை மதிப்பீடு செய்வது குறித்து அனுப்பப்பட்ட கடிதங்கள் மற்றும் அறிக்கை, வரைபடம் அடங்கிய கோப்பு **அசா.ஆ.**21 ஆகும். மேலும் இதுகுறித்து சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் 28.8.2012 ம் தேதி அன்று என்னை விசாரித்தபோது ஆவணங்களை பார்த்து நான் வாக்குமூலம் கொடுத்தேன். அதன் பிறகு இந்த வழக்கு சம்பந்தமாக, சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள் என்னை 3.5.2013 ம் தேதி விசாரித்தார். அப்போதும் நான் மேற்படி ஆவணங்களை பார்த்து வாக்குமூலம் கொடுத்தேன்.

1,2 வது எதிரிகள் தரப்பில் கு.வி-

2003-2004 ல் கட்டப்பட்ட வீட்டை நான் 2012ம் வருடம் பார்வையிட்டு மதிப்பீடு செய்தேன் என்றால், அது சரிதான். மேற்படி வீடு 2003-2004ம் வருடம் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது என்பதற்கான ஆவண ஆதாரங்களை பார்த்தேனா என்றால், ஆமாம் பார்த்தேன். plan approval and EB connection பெற்றதற்கான ஆவணங்களை பார்த்தேன். கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பிறகுதான் நிரந்தரமான EB connection வழங்கப்பட்டது. 2003-2004ம் ஆண்டு டிலேயே கட்டிடத்தில் உள்ள வசதிகளான wooden cupboard, Marbles மற்றும் உள் வசதிகள் அனைத்தும் செய்து முடிக்கப்பட்டதா என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. 2003-2004ம் ஆண்டுக்கு தயார் செய்யப்பட்ட செந்தூர விலைப் பட்டியலை வழக்கு கோப்புடன் இணைத்து அனுப்பவில்லை என்றால், அது சரிதான். மேற்படி கட்டிடம் தரைதளம், முதல் தளம் கொண்டவை என்றால், அது சரிதான். 2 toiletலும், ceramic tiles போடப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், அது சரிதான். கார்பட் ஏரியாவில் குறிப்பிடப்பட்டுள்ள 325.46 m.sq-ல், toilet பகுதியில், போடப்பட்டுள்ள செராமிக் பகுதியை கழித்து காட்டவில்லை என்றால், அது சரிதான். செந்தூர விலைப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள விலைக்கும், மார்கெட் தொகைக்கும் சிறு வித்தியாசமாவது இருக்கும் என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. எதிரி தன்னுடைய நிலத்திலிருந்து எடுக்கப்பட்ட மரம், கருங்கல் மற்றும் செங்கல் மூலம் வீட்டு வேலைபாடுகளை செய்திருந்தால், செந்தூர விலைப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கும் வித்தியாசம் இருக்கும் என்றால், தோராயாமாக வித்தியாசம் என்பது 10 சதவிகிதத்திற்குள் தான் இருக்கும். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வீட்டைதான், நான் மதிப்பீடு செய்தேனா என்றால், சாட்சி புகைப்படத்தை பார்த்துவிட்டு அதைப்பற்றி என்னால் தெளிவாக சொல்ல முடியாது என்று கூறிவிட்டார். வீட்டை பார்வையிட்ட அன்று, நான் விஜிலென்ஸ் அலுவலகத்திற்கு சென்று, அங்கிருந்து போலீசாருடன் மேற்படி வீட்டிற்கு சென்றோமா என்றால், இல்லை, போலீசார் எங்களை ஒரு இடத்திற்கு வரச்சொன்னார்கள், நாங்கள் அங்கிருந்து மேற்சொன்ன இடத்திற்கு சென்றோம். மேற்படி வீட்டில் உள்ள வசதிகள் அனைத்தையும் 2003-2004ம் ஆண்டிலேயே செய்யப்பட்டது என்பதற்கான ஆவண, ஆதாரங்களை நான் பார்க்கவில்லை என்றால், அது சரிதான். மேற்படி வீட்டிலுள்ள வசதிகள்

அனைத்தும், 2003-2004 ம் ஆண்டில் செய்யப்படவில்லை என்றாலும், அதிலிருந்து 5 ஆண்டுகள் கழித்து செய்யப்பட்டது என்றால், அது சரியல்ல. 2003-2004 ம் ஆண்டு கட்டிட வேலை முழுவதுமாக முடிக்கநிலத்திலிருந்து எடுக்கப்பட்ட மரம், கருங்கல் மற்றும் செங்கல் மூலம் வீட்டு வேலைபாடுகளை செய்திருந்தால், செந்துார விலைப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கும் வித்தியாசம் இருக்கும் என்றால், தோராயாமாக வித்தியாசம் என்பது 10 சதவிகிதத்திற்குள் தான் இருக்கும்.ப்படவில்லை என்றால், அதைப்பற்றி நிலத்திலிருந்து எடுக்கப்பட்ட மரம், கருங்கல் மற்றும் செங்கல் மூலம் வீட்டு வேலைபாடுகளை செய்திருந்தால், செந்துார விலைப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கும் வித்தியாசம் இருக்கும் என்றால், தோராயாமாக வித்தியாசம் என்பது 10 சதவிகிதத்திற்குள் தான் இருக்கும் என்பது பற்றி எனக்கு தெரியாது. செந்துார விலைப்பட்டியலை நான் என்னுடைய ஆவணத்துடன் இணைக்காததால், அதில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பீட்,டை எடுத்துக்கொள்ள முடியாது என்றாலும், செந்துார விலைபட்டியல் என்று விஜிலென்ஸ் போலீசார் சொல்லியவாறு நாங்களே தயார் செய்து கொண்டோம் என்றால், அது சரியல்ல. செந்துார விலைபட்டியல் என்பது தமிழ்நாடு முழுவதற்கும், பொருந்தக்கூடியது. விலைநிலத்திலிருந்து எடுக்கப்பட்ட மரம், கருங்கல் மற்றும் செங்கல் மூலம் வீட்டு வேலைபாடுகளை செய்திருந்தால், செந்துார விலைப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கும் வித்தியாசம் இருக்கும் என்றால், தோராயாமாக வித்தியாசம் என்பது 10 சதவிகிதத்திற்குள் தான் இருக்கும் விலைப்பட்டியல் ஒன்றாகும். மேற்படி வீட்டிற்கு மதிப்பீடு தொகையாக குறிப்பிடப்பட்டுள்ள ரூ.13,80,707/-என்பது 2004 க்கு பொருந்தக்கூடியது அல்ல என்றால், அது சரியல்ல. 2 வது தளத்தில் ACC sheet அறையும், RCC sheet அறையும், 2003-2004-ம் ஆண்டில் இல்லை என்றால், அது சரியல்ல. வீட்டை கட்டி 8 ஆண்டுகளுக்கு பிறகு போட்ட மதிப்பீடு அறிக்கை முற்றிலுமாக செல்லாது என்றால், அது சரியல்ல. நிலத்திலிருந்து எடுக்கப்பட்ட மரம், கருங்கல் மற்றும் செங்கல் மூலம் வீட்டு வேலைபாடுகளை செய்திருந்தால், செந்துார விலைப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கும் வித்தியாசம் இருக்கும் என்றால், தோராயாமாக வித்தியாசம் என்பது 10 சதவிகிதத்திற்குள் தான் இருக்கும்.

**மறு விசாரணை –**

நான் மேற்படி வீட்டை ஆய்வு செய்தபோது, விஜயாவும், பன்னீர்செல்வமும்,

மேற்படி வீட்டிற்கு தங்களுடைய நிலத்திலிருந்து எடுக்கப்பட்ட மரம், கருங்கல் மற்றும் செங்கல் மூலம் வீடு கட்டப்பட்டதாக நான் ஆய்வு செய்த போது சொன்னார்களா அல்லது ஆவணங்களை காட்டினார்களா என்றால், இல்லை.

**<u>மறு குறுக்கு விசாரணை-</u>**

மேற்படி விவரங்கள் குறித்து நான், பன்னீர் செல்வம் மற்றும் விஜயாவிடம் கேட்டேனா என்றால், கேட்கவில்லை.

Sd/- தமிழரசு

/True copy/

Sd/-Tmt.V.P.Sugandhi,
Special Judge,
Special court for trial of cases under the
Prevention of Corruption Act, Salem.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure).

| | |
|---|---|
| **IN THE COURT OF** | ***Special Court for trial of cases under the Prevention of Corruption Act, Salem.*** |
| Calendar | |
| Miscellaneous | |
| Preliminary register | |
| Sessions | Special CC . 1 / 2017 |
| Deposition of witness for ---- | Prosecution : P.W. 6 |
| Name | : திரு. முருகானந்தம் |
| Father's Name | : சுப்ரமணியம் |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act by Tmt. Kalpana, Assistant of this court on the day of 9.7.2019.

**முதல் விசாரணை**

நான் தற்போது, பெத்தநாயக்கன்பாளையம் சார்பதிவாளராக பணி புரிந்து வருகிறேன். 2013 ம் வருடம் சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி சார்பதிவாளராக பணிபுரிந்து வந்தேன். சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களிடமிருந்து, 11.2.2013 தேதியிட்ட கடிதத்தின் மூலம் ஆவண எண். 845/1998, 1015/1993 மற்றும் 1501/2004 ஆகியவற்றின் ஆவணங்களின் சான்றிட்ட நகல்களை அனுப்பி வைக்குமாறு கேட்டிருந்தார்.

மேற்படி 3 ஆவணங்களில், ஆவண எண். 1015/1993 விஜயா க.பெ.பன்னீர்செல்வம் என்பவர் பெயரில் இருந்தது. ஆவண எண்.845/1998, விஜயா, க.பெ.பன்னீர்செல்வம் என்பவர் பெயரில் இருந்தது. ஆவண எண்.1501/2004 விஜயா க.பெ.பன்னீர்செல்வம் என்பவர் பெயரில் இருந்தது. மேற்படி 3 ஆவணங்களும் கிரைய பத்திரங்கள் ஆகும். ஆவண எண். 1015/1993 க்கு ரூ.3010 முத்திரைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. பதிவு கட்டணமாக ரூ.280/- செலுத்தப்பட்டுள்ளது. ஆவண எண். 845/1998, க்கு ரூ.31,070/- முத்திரைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. பதிவு கட்டணமாக ரூ.2,610/- செலுத்தப்பட்டுள்ளது. ஆவண எண். 1501/2004 க்கு ரூ.950/- முத்திரைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. பதிவு கட்டணமாக ரூ.200/- செலுத்தப்பட்டுள்ளது. புலன் விசாரணை நிமித்தமாக மேற்படி 3 ஆவணங்களின் சான்றிட்ட நகல்களை நான்தான் கையொப்பம் செய்து அனுப்பி வைத்தேன். மேற்படி ஆவண எண். 1015/1993 சான்றிட்ட நகல் **அசா.ஆ.22** ஆகும். ஆவண எண். 845/1998 சான்றிட்ட நகல் **அசா.ஆ.23** ஆகும். ஆவண எண். 1501/2004 சான்றிட்ட நகல் **அசா.ஆ.24** ஆகும். மேற்படி ஆவணங்களை காட்டி DSP அவர்கள் என்னை 3.5.2013 ம் தேதி அன்று விசாரித்தார்.

**<u>கு.வி.-</u> இல்லை என்று 1,2 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் தெரிவித்தார்.**

Sd/- முருகானந்தம் /True copy/

Sd/-Tmt.V.P.Sugandhi,
Special Judge,
Special court for trial of cases under the
Prevention of Corruption Act, Salem.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure).

**IN THE COURT OF** ***Special Court for trial of cases under the Prevention of Corruption Act, Salem.***

Calendar

Miscellaneous

Preliminary register

Sessions Special CC . 1 / 2017

Deposition of witness for ---- Prosecution : P.W. 7

Name : திரு. மாணிக்கம்

Father's Name : கந்த சுப்ரமணியம்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act by Tmt. Kalpana, Assistant of this court on the day of 9.7.2019.

முதல் விசாரணை

நான் திருச்சி மாவட்டம், சீட்டு மற்றும் சங்கம் சார்பதிவாளராக பணிபுரிந்து, 30.3.2019 ம் தேதி பணி ஓய்வு பெற்றேன். கடந்த 4.7.12 ம் தேதி முதல் 17.7.2015 வரை சூரமங்கலம் சார்பதிவாளராக பணிபுரிந்து வந்தேன். 11.2.2013 ம் தேதி சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஆவண எண். 2572/2001, 4090/2010 ஆகியவற்றின் சான்றிட்ட நகல்களை கேட்டு கடிதம் அனுப்பியுள்ளார். மேற்படி ஆவண எண். 2572/2001

விஜயா, க.பெ.பன்னீர்செல்வம் பெயரில் உள்ளது. மேற்படி ஆவணத்தில் கண்டுள்ள சொத்தை ரூ.5,48,000/-த்திற்கு கிரையம் வாங்கியுள்ளார். அதற்கு முத்திரை கட்டணமாக 79,250/-ம் பதிவு கட்டணமாக ரூ.5510/-ம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தின் சான்றிட்ட நகலை தயார் செய்து, நான் கையொப்பம் செய்து, விஜிலென்ஸ் டிஎஸ்பிக்கு 28.2.2013 ம் தேதி அனுப்பி வைத்துள்ளேன். அது **அசா.ஆ.25** ஆகும். ஆவண எண். 4090/2010 விஜயா, க.பெ.பன்னீர்செல்வம் பெயரில் உள்ளது. மேற்படி ஆவணத்தில் கண்டுள்ள சொத்தை ரூ.12,75,000/-த்திற்கு கிரையம் வாங்கியுள்ளார். அதற்கு முத்திரை கட்டணமாக ரூ.1,18,000/-ம், பதிவு கட்டணமாக ரூ.14,910/-ம் செலுத்தப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தின் சான்றிட்ட நகலை தயார் செய்து, நான் கையொப்பம் செய்து, விஜிலென்ஸ் டிஎஸ்பிக்கு 28.2.2013 ம் தேதி அனுப்பி வைத்துள்ளேன். அது **அசா.ஆ.26** ஆகும். சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், 3.5.13 ம் தேதி தேதி அன்று என்னை விசாரித்தார்.

**குறு.வி.- இல்லை என்று 1,2 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் தெரிவித்தார்.**

Sd/- மாணிக்கம்

/True copy/

Sd/-Tmt.V.P.Sugandhi,
Special Judge,
Special court for trial of cases under the Prevention of Corruption Act, Salem.